செ.வெ.எண்:26/அக்டோபர் நாள்: 20.10.2020

# இராமநாதபுரம் மாவட்டம்

## உரம் தொடர்பான புகார்களை தெரிவிக்கலாம் மாவட்ட ஆட்சித் தலைவர் திரு.கொ.வீர ராகவ ராவ்,இ.ஆ.ப., அவர்கள் தகவல்.

இராமநாதபுரம் மாவட்டத்தில் தற்போது சம்பா பருவத்தில் 1 இலட்சத்து 4 ஆயிரத்து 412 எக்டேர் பரப்பில் நெல் விதைப்பு செய்யப்பட்டுள்ளது. நெற்பயிர் 10 நாள் முதல் 30 நாள் பயிராக, களை எடுக்கும் பருவத்திலும், மேலுரம் இடும் பருவத்திலும் உள்ளது.

இப்பருவத்திற்கு தேவையானஉரங்கள் தனியார் உர விற்பனை நிலையங்கள் மற்றும் தொடக்க வேளாண் கூட்டுறவு சங்கங்களில் இருப்பு வைக்கப்பட்டுள்ளது. நாளது தேதியில் 3070 மெட்ரிக் டன் யூரியா,1230 மெட்ரிக் டன் டி.ஏ.பி, 2630 மெட்ரிக் டன் காம்ப்ளக்ஸ் மற்றும் 242 மெட்ரிக் டன் பொட்டாஷ் உரங்கள் தொடக்க வேளாண் கூட்டுறவு சங்கங்களிலும், தனியார் உர விற்பனை நிலையங்களிலும் இருப்பு உள்ளது.

யூரியா 45 கிலோ மூடை ரூ.266.50-க்கும், 50 கிலோ மூடை பொட்டாஷ் ரூ.875-க்கும் விற்பனை செய்யப்பட வேண்டும். விவசாயிகளுக்கு உரங்களை விற்பனை செய்யாமல் செயற்கையான உர பற்றாக்குறையை ஏற்படுத்துவது, விவசாயிகள் அல்லாதவர்களுக்கு உர விற்பனை செய்வது, ஒரே நபருக்கு அதிக உரங்கள் விற்பனை செய்வது, உர விலைப்பட்டியல் பலகை வைக்காமல் இருப்பது, வேறு மாவட்டத்திற்கு உரத்தை கடத்துவது, அதிகபட்ச சில்லரை விற்பனை விலையை விட கூடுதல் விலைக்கு விற்பது, ரசீது கொடுக்க மறுப்பது, உள்ளிட்டவை கண்டறியப்பட்டால் உரக்கட்டுப்பாட்டு ஆணை 1985 மற்றும் உர நகர்வு ஆணை 1973-ன்படி கடும் நடவடிக்கை எடுக்கப்படுவதுடன் அதிகபட்ச தண்டனையான உர உரிமம் ரத்து செய்வதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்படும் என எச்சரிக்கப்படுகிறது.

உரம் தொடர்பான புகார்களை இராமநாதபுரம் மாவட்ட வேளாண்மை உதவி இயக்குநர்(த.க) அலுவலக எண்-04567 230387, வட்டார வேளாண்மை உதவி இயக்குநர், இராமநாதபுரம் - 9788516733, திருப்புல்லாணி - 9443226130, உச்சிப்புளி - 9790257271 ஆர்.எஸ்.மங்கலம் - 9788168576, திருவாடானை - 9080360453, பரமக்குடி - 8637493991 நயினார்கோவில் - 9443090564, சத்திரக்குடி - 9791794530, முதுகுளத்தூர் -7904812411 கமுதி - 8870167153, கடலாடி-9486118714 ஆகிய எண்களில் தெரிவிக்கலாம்.

மேற்கண்ட தகவலை மாவட்ட ஆட்சித் தலைவர் திரு.கொ.வீர ராகவ ராவ்,இ.ஆ.ப., அவர்கள் தெரிவித்துள்ளார்.

**வெளியீடு: செய்தி மக்கள் தொடர்பு அலுவலகம், இராமநாதபுரம்.**